தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை
## (வேலைவாய்ப்புப் பிரிவு)



# வேளாண் பொறியாளர்
## (AGRICULTURAL ENGINEER)

வெளியீடு

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
(வேலைவாய்ப்புப் பிரிவு)
சென்னை–600 032.

# வேளாண் பொறியாளர்
# (AGRICULTURAL ENGINEER)



சுழன்றும் ஏர் பின்னது உலகம்’ என்றார் வள்ளுவர். உலகில் மனித இனம் இருக்கும் வரை வேளாண் துறையில் வேலைவாய்ப்புகள் வளர்ந்து கொண்டே இருக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்தில்லை. பண்டைக்காலம் போல் தற்போது வேளாண் பணிகள் விலங்கினங்களைக் கொண்டே முழுவதும் செய்யப்படுவதில்லை. இவ்வகையில் இயந்திரமயமாதலின் விளைவுகள் வேளாண்துறையையும் விட்டு வைக்கவில்லை. நிலத்தைப் பண்படுத்துவது முதல் நீர் மேலாண்மை வரை அனைத்துப்பணிகளும் இயந்திரங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மனிதனின் கல்வித்தரம் உயர்வதால் உடல் வலிமையைக் கொண்டு முடிக்கக் கூடிய பெரும்பாலான பணிகளை தம் அறிவைப் பயன்படுத்தி உன்னதமான இயந்திரங்களைக் கண்டுபிடித்து அதனின் மூலம் வேளாண் பணிகள் உள்ளிட்ட அனைத்து பணிகளையும் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகி விட்டது. அதனால் ஏர் உழுதல், நாற்று நடல், களை பறித்தல், நீர் பாசனம் மற்றும் அறுவடை ஆகிய பணிகளில் மட்டுமின்றி நீர் மற்றும் மண் மேலாண்மை, உணவுப்பொருள்களைப் பதப்படுத்தி விற்பனை செய்தல் பாதுகாத்தல் வரையிலான அனைத்துப்பணிகளையும் வேளாண் பொறியியல் இயந்திரங்களைக் கொண்டு செயல்படுத்த வழிவகை ஏற்பட்டுள்ளதால் விளைநிலங்கள் உள்ள இடங்களிலேயே வேலைவாய்ப்புகள் கிடைக்கும் நிலையும் உருவாகி உள்ளது. எனவே வருங்காலத்தில் மிகுதியான வேலைவாய்ப்புகளை அள்ளித்தரும் ஒரு துறையாக வேளாண் பொறியியல் துறையும் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அத்தகைய சிறப்புமிக்க பணியினைப் பற்றிய விவரங்களைத் தருகிறது இக்கையேடு

**தொழில் துறை: வேளாண் பொறியாளர் பணியிடம் வேளாண்மை தொழிற்பிரிவின் கீழ் அமைந்துள்ளது.**

## பணியின் விளக்கம்

இப்பணியினைத் தேர்ந்தெடுப்போர் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- வேளாண் தொழில் சார் சிக்கல்களுக்கு பொறியியல் பின்புலத்தில் அணுகி தீர்வு காணுதல்
- வேளாண் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களை வடிவமைத்தல்,உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல்
- வேளாண் தொழிலுக்குத் தேவைப்படும் கட்டிடங்களை வடிவமைத்தல்
- வேளாண் உற்பத்திப் பொருட்களை அறுவடை செய்தல், மற்றும் பதப்படுத்தல், விற்பனைக்கு உதவும் வகையில் உள்ள இயந்திரங்களை கையாளுதல்
- மண் அரிப்பைத் தடுக்கும் பணிகளை மேற்கொண்டு மண்வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் மண் மேலாண்மை அறிவு
- நீர் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் நீர் பாசன வசதி மேலாண்மை
- அனைத்து வகையான வேளான் பணிகலளை மேலாண்மை செய்தல்
- நோய் மற்றும் பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காத்தல்

- ஊரகச் சாலைப் பாதுகாப்பு மற்றும் நிலங்களைத் தீயிலிருந்து பாதுகாத்தல்
- **பணிச் சூழ்நிலை**
- இப்பணியினை முழுநேரமாகவோ பகுதி நேரமாகவோ மேற்கொள்ளலாம்
- உள்ளூர் மற்றும் வெளியூர் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும்
- விவசாய பணியாளர்களை கண்காணித்தல் அவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்குதல் போன்ற பணிகளைச் செய்ய வேண்டியிருக்கும்
- **வேலை நேரம்**
- குறைந்த பட்சம் 9 மணி நேரம் பணிசெய்ய வேண்டியிருக்கும்
- பருவ காலங்களில் வேலை நேரம் கூடலாம்
- இப்பணி மாற்றுத்திறானாளிகளுக்கு உகந்தது இல்லை
- **கல்வித்தகுதி மற்றும் பயிற்சி**
- பத்தாம் வகுப்பிற்குப் பின் வேளாண் பொறியியலில் பட்டயப் படிப்பு
- மேல்நிலைக் கல்விக்குப் பின் வேளாண் பொறியியலில் பட்டப் படிப்பு
- வேளாண் பொறியியலில் பட்டப்படிப்பிற்குப்பின் முதுநிலை/ஆராய்ச்சிப் படிப்புகள்
- **முக்கியத் திறன் தேவைகள்**
- இயந்திரவியல் மற்றும் பொறியியலில் தெளிந்த அறிவு
- பல்வேறு வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப வடிவமைப்பு சார் அறிவு
- வேளாண் தொழிலின் வளர்ச்சி மற்றும் மேலாண்மை பற்றிய தெளிவு
- சுற்றுப்புறச் சூழல் நலன் குறித்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் மதிநுட்பம்
- நீர்பாசன வகைகள் பற்றித் தெரிந்திருத்தல்
- வேளாண் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களைப் பற்றியும் அவைகளில் இருந்து பயிர்களைக் காக்கும் முறைமைகள் தொடர்பான விவரங்களை அறிந்திருத்தல்
- வேளாண் தொழிலில் நலன் மற்றும் பாதுகாப்பை திறமையாக கடைபிடித்தல்

**விரும்பக்கூடிய திறன் தேவைகள்:** ஏதுமில்லை.

## வேளாண் பொறியியல் படிப்பை வழங்கும் திறன் பயிற்சி மற்றும் கல்வி நிலையங்கள்

| | |
|---|---|
| Agricultural Engineering College and Research Institute , Pallapuram Post, Kumulur, Trichy, Tamil Nadu 621712Phone: 0431 254 5000 | B.Tech. Agricultural Engineering( 4 years) |
| Bannari Amman Institute of Technology Alathukombai Post, Erode District, Sathyamangalam, Tamil Nadu 638401Phone: 04295 226 000 | B.E. - Agricultural Engineering (4 Years) |
| Karunya university, Coimbatore | B.E. - Agricultural Engineering (4 Years) |
| Sri Shakthi Institute of Engineering and Technology (SIET, Coimbatore) | B.E. - Agricultural Engineering (4 Years) |
| Sethu Institute of Technology, Sethu Educational Trust, Virudhunagar | B.E. - Agricultural Engineering (4 Years) |
| Paavai Engineering College, Namakkal | B.E. - Agricultural Engineering (4 Years) |
| Mahendra Engineering College, Namakkal | B.E. - Agricultural Engineering (4 Years) |

## மேலும் விவரங்களுக்கு :

Please refer this link for list of colleges and address: https://www.shiksha.com/b-tech/course/b-e-in-agricultural-and-irrigation-engineering-college-of-engineering-anna-university-ceg-guindy-guindy-chennai-167403 Or check the Anna University admission brochure for details. The colleges are added every year

## திறன் பயிற்சி திட்டங்கள் - கல்வி உதவித்தொகை

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மூலம் Post Matric Scholarship for SC/ST, Merit cum Means (MCM) Scholarships, National Talent Scholarships (NTS) , ICAR Junior Research Fellowships for pursuing Master's degree ,ICAR Senior Research Fellowships for pursuing Ph. D. degreeவழங்கப்படும் உதவித்தொகைகளைப் பெறலாம் மேலும் விவரங்களுக்கு <http://mhrd.gov.in/scholorships-education-loan-0> இணையதளத்தினை காணலாம்.

## தொழில் வளர்ச்சி பாதை/ வேலையளிப்பவர்கள் அரசுத்துறை

பட்டயப் படிப்பு முடித்தவர்கள் இளநிலை பொறியாளராகப் பணியில் சேர்ந்து தகுதியை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் உதவி பொறியாளர். – உதவி செயற் பொறியாளர்– செயற் பொறியாளர் – தலைமை செயற் பொறியாளர்– முதன்மை செயற் பொறியாளர் வரை உயரலாம்.
பட்டப் படிப்பு முடித்தவர்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் நடத்தும் தேர்வினை எதிர்கொண்டு உதவி பொறியாளர்.– உதவி செயற் பொறியாளர்– செயற் பொறியாளர் – தலைமை செயற் பொறியாளர்ஙி முதன்மை செயற் பொறியாளர் வரை உயரலாம்.
வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் ஙி இணை பேராசிரியர், பேராசிரியர் மற்றும் முதல்வர் பணி வரை பணியாற்றலாம்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ICAR Junior Research Fellowships for pursuing Master's degree மற்றும் ICAR Senior Research Fellowships for pursuing Ph. D. degree பட்டம் பெற்று ஆராய்ச்சியாளராகப் பணிபுரியலாம்

## தனியார்துறை

தனியார் பொறியியற் தொழிற்சாலைகளில் பொறியாளராகவும், ஆராய்ச்சியாளராகவும் விற்பனைப் பிரதிநிதிகளாகவும் பணி புரியலாம்.,

வங்கிகளின் நிதியுதவிப் பெற்று தனிப்பட்ட முறையில் ஆலோசகராகவும், வேளாண் இயந்திரங்களை உழவர்களின் பன்பாட்டிற்கு அளித்து அதன்வழியும் வருமானம் பெறலாம்

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பணிவாய்ப்புகள் உள்ளன

**ஊதியம்:**. மாதத்திற்கு ரூ. 35,000– 1,00,000

தேவையான முன் அனுபவம்

தேவையில்லை

தொழில் குறியீட்டு எண் ( தகுதி)

| தகுதி | குறியீட்டு எண் | விளக்கம் |
|---|---|---|
| NCO-2015 | 21410900 | |
| ISCO- 2008 | 2141 | |
| NIC-2008 | 01611<br>01612 | Agricultural activities on a fee or contract basis (preparation of fields, establishing a crop, treatment of crops, crop spraying, trimming of fruit trees and vines, transplanting of rice, thinning of beets, harvesting, pest control in connection with agriculture etc.); Operation of agricultural irrigation equipment |
| QP reference | | |
| NSQF | | |